19.8.2007

தமிழ் சுடர்

19.8.07

செய்தி சிதறல்

# மென்பொருள் பயிற்சி மையம்

மதுரை,ஆக.19- இந்தியாவிலேயே முதல்முறையாக சாப்-பி1 மென்பொருள் பயிற்சியை சாப் இந்தியா நிறுவனமும், ஆல்டியா இன்போடெக் நிறுவனமும் இணைந்து மதுரையில் அறிமுகம் செய்கின்றன. பி-1 மென்பொருள் நிறுவனங்களின் நிதி, விற்பனை, கொள்முதல், உற்பத்தி, வாடிக்கையாளர் உறவு மேலாண்மை ஆகிய அனைத்து செயல்களையும் ஒருங்கிணைத்து உற்பத்தியை அதிகரிக்கவும், செலவுகளைக் குறைக்கவும் துல்லியமான நிதியறிக்கைகளை தயாரிக்க உதவுகிறது. சாப் மதுரை பயிற்சி மைய துவக்க விழா வருகிற 20-ம் தேதி ராஜாமுத்தையா மன்றத்தில் நடைபெறுகிறது. இவ்விழாவில் தியாகராஜர் பொறியியல் கல்லூரி தாளாளர் கருமுத்து.தி. கண்ணன், தமிழ் இசைச் சங்கத்தின் காப்பாளர்சேக்கப்பன், சாப் இந்தியா நிறுவன பயிற்சி பிரிவு மேலாளர் சஞ்சய் வஸ்வானி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.